**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமசந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - சி.வி. ஜெயதேவி | **PW-6** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - லேட் பி.எஸ். நஞ்சப்பா | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - 77 |

**(எதிரி ஆஜர் )**

**<u>சாட்சி மனுவின் பெரியல் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>-**

நான் இந்திய அரசாங்கத்திடமிருந்து கைரேகை நிபுணத்துவத்தை பொறுத்து ஆய்வு செய்ய அங்கீகாரம் பெற்றுள்ளேனா என்றால் அவ்வாறு அங்கீகாரம் பெற வேண்டும் என்று நிபந்தனை அல்லது விதிமுறைகள் எதுவும் கிடையாது. நான் கைரேகை நிபுணத்துவம் குறித்து ஆய்வுகளை கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி வருகிறேன். அனைத்து நீதிமன்றங்களிலும் ஆஜராகி அது குறித்து எனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளேன். கர்நாடகா உயர்நீதிமன்றம் பல்வேறு வழக்குகளை எனக்கு நிபுணத்துவம் கோரி அனுப்பி வைத்துள்ளது அதை பொருத்தும் நான் அறிக்கைகள் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சங்கதிகள் அனைத்தையும் நான் போலீசார் என்னை விசாரித்த சமயம் சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் இது குறித்து விசாரிக்கவில்லை என்பதால் சொல்லவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் பிரச்சனைக்குரிய ஆவணங்கள் மற்றும் ஒத்துக் கொள்ளப்பட்ட ஆவணங்களில் உள்ள கைரேகைகளை புகைப்படம் எடுத்து அதன் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டேனா அல்லது நவீன கணினி மூலமாக புகைப்படம் எடுத்து ஆய்வு மேற்கொண்டேனா என்றால் நான் நீதிமன்றத்திற்கு நேரடியாக வந்து ஆவணங்களை புகைப்படக் கருவி மூலமாக புகைப்படம் எடுத்து அதன் அடிப்படையில் தான் ஆய்வு மேற்கொண்டேன். 2004 ஆம் ஆண்டு நான்

அவ்வாறு நீதிமன்றத்திற்கு வந்து புகைப்படம் எடுக்க பயன்படுத்திய புகைப்படம் கருவியின் பெயரை எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. புகைப்படம் எடுத்தது யார் என்றாவது எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் நான் தான் எடுத்தேன், நான் எடுத்ததை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். புகைப்படம் எடுப்பதற்கு எந்த வகையான பிலிம் ரோல்களை பயன்படுத்தியதாக சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. நான் நிபுணத்துவம் பெற்ற புகைப்பட கலைஞரா என்றால் நிபுணத்துவம் சான்று எதுவும் பெறவில்லை ஆனால் புகைப்படம் எடுப்பது குறித்து சிறுவயதிலிருந்தே கற்றுக் கொண்டேன். EXPOSURE TRIANGLE என்றால் என்ன என்று தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை. என்ன வெளிச்சத்தை பயன்படுத்தி புகைப்படம் எடுத்தேன் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நான் பயன்படுத்திய ஆரோ ஃபிலிம்-ன் ஐஎஸ்ஓ என்னவென்றால் தெரியாது. நான் பயன்படுத்திய கேமராவின் ஷட்டரின் வேகம் என்னவென்றால் தற்பொழுது தெரியவில்லை. எந்த வகையான ஷட்டரின் வேகம் உடைய கேமராவை பயன்படுத்தினேன் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. கேமராவின் APERTURE -ன் அளவு குறித்து அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. புகைப்படம் எடுத்த நெகட்டிவ் யார் பிரிண்ட் அவுட் போட்டார்கள் என்ற விவரத்தை அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு பிரிண்ட் அவுட் எடுக்கும் சமயத்தில் கையில் ஏற்படும் வியர்வை துளிகள் பிரிண்ட் அவுட் எடுத்த படத்தில் படும் நிலையில் படத்தின் பிம்பம் அதாவது கைரேகையின் பிம்பம் பாதிக்கப்படும் என்றால் சரியல்ல பாதிக்காது. நான் சொல்வது தவறு என்றும், என்னிடம் காண்பிக்கப்படும் TOPICS IN PHOTOGRAPHIC PRSERVATION 1993, VOL5, ARTICLE 2 (PP.8- 13) இன் படி FiNGERPRINTS ON PHOTOGRAPHS BY KLAUS B.HENDRIKS AND RUDIGER KRALL-ல் கைரேகை உள்ளங்கையில் ஏற்படும் வியர்வை துளிகள் ப்ராசஸ் செய்யும் சமயத்தில் போட்டோ FINGER பிரிண்ட் அவுட்டில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் போட்டோ பிரிண்ட் அவுட் எடுக்கும் சமயத்தில் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுத்த பின்னிட்டு தான் அவ்வாறு பிரிண்ட் அவுட் எடுப்பேன். நான் அவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகளை கையாண்ட பின்னிட்டு பிரிண்ட் அவுட் எடுத்தது சம்பந்தமாக எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு பிராசஸ் செய்து எடுக்கப்பட்ட பிரிண்ட் அவுட்டுகளின் எண்ணிக்கைகள் எவ்வளவு என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஃபோட்டோ பிரிண்ட் அவுட் எடுப்பதற்கு முன்பாக நெகட்டிவ்களை யார் பிராசஸ் செய்தது என்ற விபரத்தை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. போட்டோ எடுத்த சமயத்தில் ஸ்கேல் வைத்து அளவுகளை குறிப்பிட்டு புகைப்படம் எடுக்கப்பட்டது என்ற விவரத்தை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

நீதிமன்றத்தில் யார் மேற்பார்வையில் ஆவணங்களை புகைப்படம் எடுத்தேன் என்ற விவரத்தை அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பாக சொல்லவில்லை. நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று இருதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் தான் எடுக்கப்பட்டது. இரண்டு வழக்கறிஞர்களின் முன்னிலையில் எந்த தேதியில் அவ்வாறு புகைப்படம் எடுக்கப்பட்டது என்று அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். இருதரப்பு வழக்கறிஞர்களின் பெயர்கள் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் புகைப்படம் எடுத்ததால் அவ்வாறு பெயரை குறிப்பிட்டு அறிக்கையில் சொல்லவில்லை. நீதிமன்றத்தில் எந்த அலுவலரின் மேற்பார்வையில் புகைப்படம் எடுக்கப்பட்டது என்ற விவரத்தை அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 12 points சொல்லியுள்ளேன் அவைகள் Galton points - களா என்றால் Ridge குணாதிசயங்கள் அவை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். என் மூலமாக குறியீடு செய்துள்ள **அ.சா.ஆ.**8 ஜெராக்ஸ் நகல் என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தை உண்மை தன்மை பொறுத்து என்னால் உறுதி செய்ய இயலாது என்றால் நீதிமன்றத்திலிருந்து சான்று ஆவணமாக பெறப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் புகைப்படம் எடுத்த ஆவணத்தில் எத்தனையாவது ஆவணத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டது என்ற விவரத்தை அறிக்கையில் சொல்லி உள்ளேனா என்றால் ஆவணத்தை பற்றி சொல்லியுள்ளேன் ஆனால் பக்கம் எண் சொல்லவில்லை. ஆவணத்தின் எண் மற்றும் அதன் விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை தேதி மட்டும் சொல்லியுள்ளேன். ஆவணத்தில் இருந்ததாக கூறும் கைரேகை ஆவணத்தின் வலது புறமாக இருந்ததா அல்லது இடது புறமாக இருந்ததா என்று சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. நான் புகைப்படம் எடுத்த கைரேகையை எந்த அளவில் அதை பெரிதாக்கி ஆய்வுக்கு உட்படுத்தினேன் என்ற விவரத்தை அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. பிங்கர் பிரிண்ட் எடுக்கும் விதிமுறைகளின் படி சாதாரணமாக Exposure triangle -ல் இருக்கக்கூடிய Shutter speed, APERTURE and ISO ஆகியவைகள் ஒன்றுக்கொன்று இயைந்து செயல்படவில்லை என்றால் Ridge- புகைப்படத்தின் குணாதிசயங்கள் எடுக்கப்படும் போட்டோ பிலிம்மிலும் மற்றும் பிரிண்ட் அவுட் எடுக்கும் புகைப்படத்திலும் Ridge குணாதிசயங்கள் மாறுபடுமென்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான உண்மை எனவே எனது அறிக்கை மேற்படி விதிமுறைகளுக்கு உட்பட்டதல்ல என்பதால் அதனை ஏற்றுக் கொள்ள இயலாது என்றால் சரியல்ல. எனது அறிக்கையில் ஏழாவதாக குறிப்பிட்டுள்ள Ridge ede delta ஆகியவைகள் இந்த புகைப்படத்தில் எந்த இடத்தில் காணப்பட்டது என்று புகைப்படத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஒவ்வொரு புகைப்படத்திலும் வரிசையில் குறிப்பிட்டுள்ளேன் அது குறித்து அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளேன். நான் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 12 விவரக் குறிப்புகள் புகைப்படத்தில் குறிப்பிட்டுள்ள எண்களுடன் ஒத்து

வருகிறது என்ற சங்கதியை எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்பட்டுள்ள அ.சா.ஆ.8 ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி 12 எண்ணிக்கைகள் கொண்ட விபரங்கள் புகைப்படத்தில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு உரித்தானது என்று குறிப்பாக சொல்லியுள்ளேனா என்றால் புகைப்படத்தை பொறுத்து தனித்தனியாக குறிப்பிடவில்லை. Bifurcation என்பது inner bifurcation or out bifurcation என்று குறிப்பாக சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு குறிப்பாக சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஒத்துக் கொள்ளப்பட்ட ஆவணத்தில் உள்ள கைரேகை யார் அடையாளம் காண்பித்தது என்ற விவரத்தை அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பாக யாரும் அவ்வாறு என்னிடம் அடையாளம் காண்பிக்கவில்லை. பிரச்சனைக்குரிய கைரேகை எது என்பது குறித்து யாராவது அடையாளம் காண்பித்தார்களா என்றால் தனியாக யாரும் அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் இரு தரப்பிலும் புகைப்படம் எடுக்கும் பொழுதும் வழக்கறிஞர்கள் இருந்தார்கள் அவர்கள் தான் சொன்னார்கள். எந்த வகையான கோர் என்று அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பாக சொல்லவில்லை. மேற்படி ஸ்கோர் குறித்து எந்த ஸ்கேல் மூலமாக அளவீடு செய்தேன் என்ற விவரத்தை அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் scale மூலமாக அளவீடு எதுவும் செய்வதில்லை. நான் எடுத்த பிரிண்ட் அவுட்டில் முதலில் இருந்து எத்தனாவது ridge- ல் core இருந்தது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி core -ஆனது centre point of impression -ல் இருந்தது. நான் ஏற்கனவே சொன்ன பதில் கோர் எங்கு இருந்தது என்று என்னால் பதில் அளிக்க இயலவில்லை என்பதால் தற்பொழுது கூறும் விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கட்டை விரலின் முழு ரேகையும் பதிவு இருந்தது என்ற விவரத்தை அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், நான் எடுத்த புகைப்படத்திலும், அறிக்கையிலும் முழுவிரல் பதிவுகள் இருந்தது என்று எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. Outer Ridge inder core - லிருந்து எத்தனையாவது அவுட்டர் ரிச்சில் முடிவடைந்தது என்ற சங்கதியை எனது அறிக்கையில் சொல்லாததால் நான் முழு படத்தையும் எடுத்தேன் என்பதை ஏற்றுக் கொள்ள இயலாது என்றால் சரியல்ல. விரல் ரேகை பதிவானது ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய விரல் ரேகை ஸ்டாம்பேடில் விரல் பதிவு அழுத்தம் கொண்ட கைரேகையா அல்லது உருட்டிய கைரேகையா என்று சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு குறிப்பாக சொல்லவில்லை. உருட்டப்பட்ட கைரேகை அமைப்புகளும், அழுத்தி வைக்கப்பட்ட கைரேகை அமைப்புகளும் புகைப்படம் எடுக்கும் சமயத்தில் கொடுக்கப்படும் வெளிச்சத்தின் முறையினையும், அளவினை பொருத்தும் எக்ஸ்போசர் ட்ரையாங்கிள் பொருத்தும் மாறுபடும் என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான பூர்வமான உண்மை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், மேற்படி விஞ்ஞான பூர்வமான

உண்மைக்கு எதிராக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒத்த கால அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டதாக சொல்லும் கைரேகை மற்றும் பிரச்சனைக்குரிய கைரேகையும் ஒரே காலகட்டமா என்று அறிக்கையில் சொல்லி உள்ளேனா என்றால் கைரேகை பதிவுகள் இறக்கும் வரை மாறாது என்பதால் அவ்வாறு குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. தற்பொழுது பயோமெட்ரிக் என்று கைரேகை பதிவு முறை உள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் கேள்வி பட்டுள்ளேன். தற்பொழுது ஆதார் கார்டுகளில் அது பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை. தற்பொழுது பத்திரப்பதிவு அலுவலகத்தில் பயோமெட்ரிக் முறையின் படி தான் மேற்படி கையெழுத்து செய்யும் நபர்களின் கைரேகைகள் பதிவு செய்யப்படுகிறது என்றால் சரிதான் கேள்விப்பட்டுள்ளேன். சாதாரணமாக ரத்த அழுத்தம் அதிகமாக அல்லது குறைவாக இருக்கும் தருவாயில் மற்றும் சர்க்கரை நோய் உடையவர்களின் சர்க்கரையின் அளவு அதிகமாக இருந்தாலோ அல்லது குறைவாக இருந்தாலோ எடுக்கப்படும் பயோமெட்ரிக் முறைப்படி கைரேகை Ridge இயந்திரத்தால் கூட கண்டுபிடிக்க இயலாது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. சாதாரணமாக விரல்களில் வெட்டு காயம் அல்லது காயங்கள் ஏற்பட்டு புண்கள் காயம் ஆரிய பின்னிட்டு தோல்கள் ஒன்று கூடும் பொழுது பழைய தோலின் இருந்த Ridges அளவுகள் ஒன்றுக்கொன்று ஒழுங்காக கூடாது என்ற மருத்துவ கோட்பாடு தெரியுமா என்றால் தற்காலிகமான காயம் ஏற்படும் பட்சத்தில் ரேகையின் அம்சங்கள் மாறாது ஆனால் நிரந்தரமான ஒரு காயம் ஏற்படும் பட்சத்தில் ரேகை அம்சங்கள் மாறும். காயம் இல்லாத விரலில் ரேகைகள் எடுக்கப்பட்டது என்ற விவரத்தை அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எடுத்த புகைப்படம் மற்றும் வழங்கிய கருத்துரைகள் அனைத்தும் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களுக்கும் ரேகைகளுக்கும் சம்பந்தமில்லாதது என்றால் சரியல்ல.
நான் புகைப்படத்தை பெரிதுபடுத்தி போட்டோ பிரிண்ட் அவுட் செய்யும் சமயத்தில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட போட்டோ பிரிண்டில் எந்தவிதமான குந்தகமும் இல்லாமல் எடுக்கப்பட்ட படத்தின் அச்சு பிரதி என்றோ அல்லது சேதம் ஏற்படாத அச்சு பிரதி போட்டோ என்று எனது அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் forensic print society-ல் உறுப்பினரா என்றால் இல்லை. மேற்படி சங்கத்தில் உறுப்பினராக இல்லாதவரோ அல்லது நிபுணத்துவம் பொறாதரோ கைரேகை குறித்து அறிக்கை அளிக்க தகுதி படைத்தவர் அல்ல என்றால் சரியல்ல. எனவே எனது ஆய்வறிக்கை உண்மையை பிரதிபலிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அரசால் அங்கீகரிக்கப்பட்ட, தகுதிபடைத்த கைரேகை நிபுணர் அல்ல என்றால் சரியல்ல. கைரேகை நிபுணராக செயல்பட வேண்டும் என்றால் அதற்கு உண்டான உரிய படிப்பு அல்லது தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் அவ்வாறு பெற்று தொடர்ந்து பணியாற்றி இருந்தால் மட்டுமே கைரேகை நிபுணராக ஏற்றுக் கொள்ள இயலும் என்று அரசின் விதிக்கு இணங்க நான் தேர்ச்சி பெறவில்லை என்றால் சரியல்ல அது போன்று எந்த படிப்பும் நிர்ணயிக்கவில்லை. நான் சொல்வது

தவறு என்றும் கைரேகை நிபுணருக்கென்று தகுதிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அரசு நிர்ணயம் செய்துள்ள நிபந்தனைகளை, விதிமுறைகளை பின்பற்றாமல் நான் ஆய்வு மேற்கொண்டுள்ளேன் எனவே எனது ஆய்வறிக்கை ஏற்றுக்கொள்ள தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு எதிராக ஆய்வறிக்கைகள் சமர்பித்தது குறித்து எனது தகுதியினை குறிப்பிட்டு கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான் ஆனால் மேற்படி உயர்நீதிமன்றமே நான் கைரேகை நிபுணத்துவம் பெற்றுள்ளேன் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. WAP.No. 6408/1999 and 7120/1999 என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தீர்ப்பிற்கு பின்னிட்டு அரசாங்கத்தால் நிபுணத்தும் குறித்து ஒரு G.O. Govt of India vide 105/1/98(4) CFPB Dt. 23/7/2001 வழங்கப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஆனால் ஆவணங்கள் அரசு கைரேகை நிபுணருக்கு மட்டுமே அனுப்ப வேண்டும் என்று பின்னிட்டு தான் தெரிந்து கொண்டேன். எனது ஆய்வறிக்கைகள் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லாத நிலையில் அதனை நிராகரிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**